1994 நவம்பர் 10] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

தொழிலாளர் நலனுக்கும் மாறாக செலவுகளைச் செய்து அந்தச் செலவுகளை ஆண்டு அறிக்கையில் சமர்ப்பித்து இருக்கிறார்கள். எனவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழிலாளர்களின் மிகப் பெரிய பிரச்சினை இது. நாம் இதைக் கவனமாகத் தீர்க்கவில்லை என்றால் அடுத்த ஆண்டு சற்றேறக்குறைய 50,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய மிகப் பெரிய பிரச்சினையாக பொதுமக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நானும் கோவை மாவட்டத்தின் தொழிலாளர் நல ஆணையரும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும் தொழிலாளர்கள் மத்தியில் பேசி அமைதியான முறையிலே இருங்கள், தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பான ஒரு முடிவை எடுக்கும் என்று சொல்லி தொழிலாளர்களை அமைதிப்படுத்தி வைத்திருக்கிறோம். எனவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, எந்தவகையிலும் அந்தக் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படவில்லை, லாபத்தில்தான் இருக்கிறது என்று அந்த நிறுவனமே ஒத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தைக் கருதி, அந்த நிறுவனத்தின் செலவுகளைக் குறைத்து ஒரு வார காலத்தில் அல்லது ஒரு மாத காலத்திற்குள் 20% போனஸ் மற்ற நிறுவனங்கள் கொடுத்தது போல் கொடுக்கச் செய்வதற்கு விரைவான ஆணையைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையதினம் நடைபெற இருக்கின்ற பேச்சு வார்த்தையில் கோவை தொழிலாளர் இணை ஆணையர் நல்ல முறையில் பேச்சுவார்த்தைகளை முடிப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

[திரு. இராம. இராமநாதன்] [1994 நவம்பர் 10

அவர்களின் பாதம் பணிந்து வணங்கி 1994-95-ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக அறிக்கையினை பேரவையில் அளிக்கிறேன். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய 1985-86-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் வணிகம், உள்துறை, தமிழ்நாடு காவலர் குடியிருப்புக் கழகம் தொடர்பாக பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1992-93 அளித்த 92-ஆவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 225ஆவது அறிக்கையினை இந்த சிறப்புமிக்க மாமன்றத்தில் அளிக்கின்றேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன் வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1994-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.